**இலங்கை சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியம் - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல்

வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் | | |
| (i) கணக்கீட்டுக் கொள்கையின் உள்ளடக்கமாக தெரிவு செய்யப்பட்ட விடயங்களுக்கிடையே சுயமாக கணக்கீட்டுக் கொள்கை மாறுகின்ற போது அது தொடர்பாக வெளிப்படுத்தப்படல் வேண்டும். எனினும், முன்னைய ஆண்டில் மறைமுக நேரின் முறையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதியத்தின் காசுப்பாய்ச்சல் கூற்று மீளாய்வாண்டின் போது நேர்முறையின் பிரகாரம் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றோம். எதிர்காலத்தில் இவ்வாறான கொள்கை ரீதியான மாற்றங்களின் போது பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் வெளிப்படுத்துவதற்கு குறிப்புக்கள் இடப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்ட போதும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுத்தப்படவில்லை. | | |
| (ii) | முன்னைய காலப்பகுதிக்குரிய கணக்கீட்டு கொள்கையொன்று கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மாற்றம் ஒன்று மற்றும் தவறொன்று கடந்தகால மீண்டும் வெளியிடுவதன் மூலம் சரி செய்ய வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான திருத்தம் ஒன்று மேற்கொள்ளப்படாது இருக்கும் போது 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றில் கடந்த ஆண்டுக்குரிய தகவல்கள் பிற்போட்ட ரீதியில் மீண்டும் கூற்றாக சரியாக வெளியிடல் பிழையாக காண்பிக்கப்பட்டுள்ளது. | 2022 ஆம் ஆண்டில் கணக்குகளில் வெளியிடப்பட்ட பெறுமதிகள் எந்தவொரு திருத்தமும் மேற்கொள்ளாது இருந்ததை குறிப்பிடுகின்றோம். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சுங்கத்தின் பல பிரிவுகளினால் சொத்துக்கள் அரசுடமையாக்கல், அவற்றை விற்பனை செய்தல், தண்டப்பணம் விதித்தல் மற்றும் அந்தப் பணங்களை சேகரித்தல் மேற்கொள்ளப்பட்ட போதும் ஆண்டுக்குரிய ஒட்டு மொத்த சுங்கத்தின் அரசுடமையாக்கப்பட்ட பொருட்களின் விற்பனையால் கிடைக்க வேண்டிய மொத்த வருமானம் மற்றும் கிடைக்க வேண்டிய மொத்த தண்டப் பண வருமானம் தொடர்பான விபரங்கள் நிதிப்பிரிவிற்கு வழங்கும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்படாதிருந்தமையால் இந்த நிதியத்தில் இருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய தொகையான ரூபா 80,379,402 பெறுமதி செலுத்துவதற்கு பிரிவிற்கு கிடைத்த கோவையின் பிரகாரம் மாத்திரம் கணிப்பீடு | சகல தண்டப் பணங்கள் மற்றும் அரசுடமையாக்கல் பொருட்களின் விற்பனை வருமானம் நியதிச்சட்ட தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் வைப்புக் கணக்குக் செலவு வைக்கப்படுகின்றது. சில விசாரணைகள் முடிவடைந்த பின்னர் புலனாய்வுகளுக்குரிய தண்டப்பணம் அதற்குரிய நபர்களுக்கு மீள செலுத்த வேண்டிய சந்தர்ப்பங்கள் உள்ளது. மேலும் இவ்வாறு வைப்புச் செய்யப்படுகின்ற பணத்தில் இருந்து புலனாய்வு நடவடிக்கைககளுக்குரிய செலவினங்களை செய்வதற்கும் ஏற்படுகின்றது. அதனால் அந்த செலவினங்களை குறைத்து மிகுதிப்பணம் சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி நிதியத்திற்கு (50 சதவீதம்), முகாமைத்துவ இழப்பீட்டு நிதியத்திற்கு (20 சதவீதம்) மற்றும் அரசாங்க வருமானத்திற்கு (30 சதவீதம்) ஆக கோவை பூர்த்திசெய்து வெகுமதி செலுத்துகின்ற சந்தர்ப்பங்களின் போது செலவு வைக்கப்படுகின்றது. அதனால் கிடைக்க வேண்டிய தண்டப் பண வருமானம் கணக்கீடு செய்வதற்காக | இலங்கை சுங்கத்தின் சகல பிரிவுகளுக்கும் உரிய செலுத்த வேண்டிய பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்படல் வேண்டும் |

| | |
|---|---|
| செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு மொத்தமாக செலுத்த வேண்டிய வெகுமதியாக நிதி நிலமைக் கூற்றில் காண்பிக்கப்பட்ட பெறுமதி பிழையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | குறித்துரைத்த தொகை ஒன்றினை இனங்காணல் உரிய புலனாய்வுகள் முடியும் வரை மேற்கொள்ள முடியாது இருந்தமையால் மேற்கொள்ளப்பட்ட விபரங்களில் அடிப்படையில் கணக்குகள் பேணிச் செல்லப்படுகின்றது. எதிர்வரும் ஆண்டில் கணக்குகளில் இந்த நிலைமையை விசேட வெளிப்படுத்தல்களின் கீழ் வெளிப்படுத்துவதற்கு குறிப்பிடுகின்றோம். |

**1.5.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1968 இன் 17 ஆம் இலக்க சுங்க கட்டளைச் சட்டத்தின் 153 (ஆ) 1 பிரிவின் பிரகாரம் தண்டப் பணம் மற்றும் அரசு உடமையாக்கப்பட்ட பொருட்கள் விற்பனை வருமானத்தில் சுங்க வெகுமதி நிதியத்திற்காக ரூபா 50 சதவீதமும், முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்திற்காக 20 சதவீதமும் ஆக பங்களிப்பு செய்யப்படல் வேண்டும். அதன் பிரகாரம் வெகுமதி நிதியத்தின் மீளாய்வாண்டிற்கான வருமானமாக இணங்காணப்பட்ட 50 சதவீதமான பங்களிப்பான ரூபா 5,611,873,320 சமமான முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்தில் 20 சதவீத பங்களிப்பு ரூபா 2,244,749,328 ஆக இருக்க வேண்டிய போதிலும் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்தின் வருமானமாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,463,397,190 காண்பிக்கப்பட்டமையினால் வருமானத்தில் ரூபா 218,647,862 இணக்கமின்மை காணப்பட்டது. | 2023 ஆம் ஆண்டில் தண்டப் பணம் மற்றும் அரசுடமையாக்கப்பட்ட பொருட்களின் விற்பனை வருமானத்தின் சுங்க வெகுமதி நிதியத்திற்காக 50 சதவீதமான பங்களிப்பும் 2023 ஆம் ஆண்டின் மொத்த கோவைகளுக்காக செலுத்தப்பட்ட போது பகுதி ஒன்று செலுத்துதல் அதற்கு முன்னைய ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்குமாயின் அந்த தொகையும் மேலும் கோவை ஒன்றிற்காக செலுத்தும் போது வெகுமதி நிதியத்திற்காக கணக்கீடு செய்ய முடியாத தொகையும் சேர்க்கப்படுகின்றது. | தண்டப் பணம் மற்றும் அரசுடமையாக்கப்பட்ட பொருட்களின் விற்பனை பெறுமானத்தில் சுங்க வெகுமதி நிலையத்திற்கு 50 சதவீதம் செலவு வைக்கும் போது அதற்கு சமமாக 20 சதவீதம் இந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்படல் வேண்டும். |

**1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| 02 சொத்து தொகுதிகளின் கீழ் கிரயம் ரூபா 123,465,297 மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு ரூபா 118,179,542 ஆன ஆதனங்கள் மற்றும் பொறிகள் மற்றும் உபகரணங்கள் நடைமுறையல்லா சொத்தாக | 123,465,297 | நிலையான சொத்துப் பதிவேடு, பொருள் மெய்மையாய்வு அறிக்கை போன்ற | சொத்துக்கள் மெய்மையாய்வு சான்றுறுதிப் படுத்துவதற்கு தேவையான வகையில் எதிர்காலத்தில் பதிவேடுகளை | சொத்துக்களை மெய்மையாய்வு செய்வதற்கு தேவையான ஆவணங்கள் பேணிச் செல்லப்படல் |

| | | |
|---|---|---|
| நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்ட போதிலும் அந்த சொத்துக்களில் சான்றுறுதிப் படுத்துவதற்கு தேவையான நிலையான சொத்துப் பதிவேடு, பொருள் மெய்மையாய்வு அறிக்கை போன்ற தகவல்கள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | தகவல்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடுகின்றோம். | வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1993 நவம்பர் 05 ஆந் திகதிய 792 ஆம் இலக்க வர்த்தமானி | சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவம் மற்றும் இழப்பீட்டு நிதியத்தில் நிதி செலவு வைக்க முடியுமான பிரதான 05 விதிகள் இணங்காணப்பட்டிருந்ததுடன் அந்த விதிகளில் நிதியேற்பாடு ஒதுக்கப்படாது எனினும் சுங்க பணிப்பாளர் நாயகத்தின் விருப்பத்தின் பிரகாரம் திணைக்களத்தின் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக தேவையான ஏதாவது விசேட நிகழ்ச்சித்திட்டம் இருக்குமாயின் விசேட முன் அங்கீகாரத்துடன் செலவிடக்கூடியதாக இருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் முகாமைத்துவ நடவடிக்கைகளின் மேலோங்க செய்வதற்கு நேரடி தொடர்பு இல்லாத உபசரிப்புச் செலவினங்களிற்காக ரூபா 554,984 இந்த நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. | சுங்க கட்டளைச் சட்டத்தின் 153 (அ) 1 பிரிவின் பிரகாரம் முகாமைத்துவ திறனை வகையில் சுங்க பணிப்பாளர் நாயகததிற்கு இருந்ததுடன் கணக்காய்வு அறிக்கையில் காண்பிக்கப்பட்ட செலவினம் 1993.11.05 ஆந் திகதிய இலக்கம் 792 வர்த்தமானியின் ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அமைச்சரின் விசேட அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளும் தேவையொன்று காணப்படவில்லை. | வர்த்தமானி ஏற்பாடுகளுக்கு இணங்கி இருத்தல் வேண்டும். |
| (ஆ) | 2023 சனவரி 27 ஆந் திகதிய இலக்கம் 2023/01 என்ற | இயலுமான சகல சந்தர்ப்பங்களிலும் மீண்டெழும் மற்றும் செயற்பாட்டுச் செலவினங்களை குறைப்பதற்கு | 2023 இன் சர்வதேச சுங்க தின விழாவிற்கு உரிய செலவினங்களை செய்வதற்காக திறைசேரி | சுற்றறிக்கைகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை | தேவையான படிமுறை எடுக்க வேண்டும் என திணைக்கள தலைவர்களுக்கு ஆலோசனை வழங்கியிருக்கும் போது மீளாய்வாண்டில் சுங்க தினத்திற்கான விழாவிற்கு ரூபா 975,941 தொகை இந்த நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. | செயற்பாடுகள் திணைக்களத்தின் 2023.01.11 ஆந் திகதிய TO/BE1/02/05/01 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் செயல் நிமித்த நிதியத்தின் மூலம் அனுமதி பெறப்பட்டு அந்த உத்தியோகபூர்வ விழாவை நடாத்துவதற்காக உரிய பணம் செலவிடப்பட்டு மிகுதி தொகை தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,400,069,243 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,499,675,714 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 900,393,529 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்புக்கு தண்டப் பண வருமானம் ரூபா 1,126,202,914 அதிகரித்துச் சென்றமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இறக்குமதியாளர்களினால் அவர்களுக்குரிய மேற்கொள்ளப்பட்ட சுங்க புலனாய்வின் விளைவாக விதிக்கப்பட்ட உரித்தற்று போனவைகள் மற்றும் தண்டப் பணத்திற்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன் அதில் சுங்கத்தில் இருந்து அறவிடப்பட்ட தொகையில் ரூபா 31,000,000 இறக்குமதியாளர்களுக்கு மீள செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. உரித்தற்று போனமை மற்றும் தண்டப் பண பெறுமதியில் 20 சதவீதம் மாத்திரம் இந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்படுகின்ற போதும் நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் இறக்குமதியாளருக்கு செலுத்த வேண்டிய இழப்பீட்டு தொகை செலுத்துவதற்காக இந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட 20 சதவீதம் பெறுமதியான ரூபா | வெகுமதிக் கோவை முழுமையாக செலுத்தி முடிவுறுத்தப்பட்டிருக்கும் போது வெகுமதிக் கோவைக்குரிய உத்தியோகத்தர்களுக்கு திரண்ட நிதியத்தில் (Pool) ஒதுக்கப்பட்டிருந்த தொகையில் ரூபா 2,716,696 தொகை 541 உத்தியோகத்தர்களுக்கு பணமாக அரசாங்கத்தின் வரியாக செலுத்தப்பட்டமையால் அந்த தொகையை அறவிடுவதற்கு நடைமுறையில் வசதியீனமாக இருந்தமை சுட்டிக்காட்டப்பட்டதன் பின்னர் உரிய இறக்குமதியாளருக்கு அந்த | நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் சுங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட உரித்தற்ற மற்றும் தண்டப்பணங்கள் மீள செலுத்துகின்ற போது வெகுமதியாக வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களிடம் இருந்து மீள அறவிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 12,000,000 தொகை மற்றும் அரசாங்கத்திற்கு வருமானத்தில் செலவு வைக்கப்பட்ட ரூபா 18,000,000 தொகை முழுமையாக மீள வழங்கப்பட்டிருந்ததுடன் வெகுமதிற்காக பணம் பெற்ற உத்தியோகத்தர்கள் அண்ணளவாக 541 அளவில் இருக்கும் போது அவர்களிடம் இருந்து எந்த தொகையும் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்படாமல் செலுத்த முடியுமான தொகை மாத்திரம் வழங்குவதற்கு இணங்கியதன் அடிப்படையில் மீள செலுத்தப்பட்டுள்ளது. | |

## 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்வேறு சுங்க தவறுகளுக்காக கிடைகின்ற நிதியில் 20 சதவீதத்திற்கு சமமான தொகையின் அளவு இந்த நிதியத்தில் செலவு வைக்கப்படுவதுடன் சுங்க கட்டளைச் சட்டத்தின் 153(ஆ)1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் பணிகள் பின்வருமாறு இருந்தது.<br>* சுங்க முகாமைத்துவதத்தின் சிறந்த முறைமையில் அபிவிருத்தி செய்வதற்காக சுங்க பணிப்பாளர் நாயகத்திற்கு எழுகின்ற வசதிகளை வழங்குதற்காக செலவினங்களைச் செய்தல்.<br>* நிரந்தரமாக அல்லது முழுமையாக அல்லது பகுதியாக சேதம் அடைந்த ஊனமுற்ற அல்லது தற்காலிகமாக ஊனமுறலுக்கு உட்பட்ட யாராவது சுங்க உத்தியோகத்தருக்கு இழப்பீடு செலுத்துதல்.<br>* ஏதாவது சுங்க உத்தியோத்தர் மரணமடையும் போது அவரின் சட்டரீதியான உரிமையாளர்களுக்கு இழப்பீடு செலுத்துதல்.<br>மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (அ) இலங்கை சுங்கத்தின் முகாமைத்துவத்தை | 2017 – 2022 வரை பட்டபின் பாடநெறி வெற்றிகரமாக | பாடநெறியை பூர்த்தி செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | கட்டியெழுப்பும் நோக்காக கொண்டு 2017 ஆம் ஆண்டில் இருந்து 2023 ஆம் ஆண்டு வரையான 07 வருட காலப்பகுதியில் 337 உத்தியோகத்தர்களுக்காக பட்டபின் படிப்பு பாடநெறியை பின்பற்றுவதற்கு முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்திலிருந்து செலவிடப்பட்ட தொகை ரூபா 131,978,786 ஆகும். எனினும் அந்த பாடநெறிகளை பூர்த்தி செய்து சான்றிதழ் பத்திரம் 162 பேர்களுக்கு மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி 175 உத்தியோகத்தர்களும் அந்த பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருந்தனரா அல்லது கைவிட்டு இருந்தனரா என்பது தொடர்பான தகவல்கள் திணைக்களத்திடம் காணப்படாதிருந்ததுடன் பின்தொடர் நடவடிக்கை முறைமையும் காணப்படவில்லை. | பூர்த்தி செய்யப்பட்டிருந்தமை போதும் கைவிடப்பட்டிருந்தாத என்ற தகவல்கள் திணைக்களத்திடம் காணப்படாது இருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் போது இந்த தகவல்கள் கணனி மயப்படுத்தல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் பட்டபின்பாடநெறியயை பின்பற்றுதல் கற்பதற்காக மேற்கூறப்பட்ட நிதியத்தில் இருந்து ஏதாவது அந்த பாடநெறியை இடைநடுவில் விட்டிருந்தமை வெளிப்படுத்தப்படுமாயின் அந்த உத்தியோகத்தர்களுடன் சுங்க திணைக்களம் ஆரம்பத்தில் கையொப்பம் இடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அந்த தொகை அவரின் / அவர்களின் மாதாந்த சம்பளத்தில் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக குறிப்பிடப்படல் வேண்டும். அவ்வாறே வருடாந்தம் உரிய பட்டபின் படிப்பு நிறுவனத்தின் மூலம் பட்ட பாடநெறிகளை பூர்த்தி செய்யும் முன்னேற்றத்தை விசாரிக்கும் நடடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உறுதிப்படுத்தல் பெறப்படல் வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டின் போது பட்டபின் பாட நெறியை பின்பற்றுவதற்கு நிதியத்திலிருந்து நிதியினைப் பெற்ற 13 உத்தியோகத்தர்கள் 2024 மார்ச் 28 ஆம் திகதி வரையில் பாடநெறியை பூர்த்தி செய்து சான்றிதழ் சமர்ப்பித்திருந்தமை கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்ட போதிலும் ஆளணிக் கோவைகளை பரீட்சித்த போது அதில் 08 | இது தொடர்பாக இந்த உத்தியோத்தர்களுக்கு அறிவித்து சான்றிதழ் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பாடநெறிகள் உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களின் பாடநெறிகள் பூர்த்திசெய்தமைக்கு உரிய சான்றிதழ் பத்திரம் நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவத்தை மேம்படுத்துதல் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு இழப்பீடு செய்வதற்காக குறித்துரைத்த குறிகாட்டிகள் மற்றும் எதிர்காலத்தில் எதிர்பார்க்கின்ற நோக்கங்களுக்கு செலவினங்களை சரியாக திட்டமிடாமல் இந்த நிதியத்திற்கு பணம் ஒதுக்கப்பட்டமையினால் நிதியத்தின் திரண்ட மீதி வருடாந்தம் தொடர்ச்சியாக அதிகரிக்கும் போக்கு அவதானிக்கப்பட்டது. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10,090 மில்லியன் ஆன நிதியத்தின் திரண்ட மீதி 2023 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 12,490 மில்லியன் வரை ரூபா 2,400 மில்லியன் அதாவது 24 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதாவது மீளாய்வாண்டின் வருமானத்தில் 96 சதவீதமும் நிதியத்தில் திரண்டு இருந்தமையால் அவதானிக்கப்பட்டது. நிதியத்தின் திரண்ட மீதி தொடர்ச்சியாக அதிகரிப்பதற்காக பின்வரும் காரணங்களும் அடிப்படையாக தாக்கமளித்திருந்தது. | | |
| (i) | சுங்க வரி மோசடிகளை கட்டுப்படுத்துவதற்காக நுண் புலானாய்வை தொடர்புபடுத்துகின்ற அபிவிருத்தி செய்யப்பட்ட முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்படாமையினாலும், உத்தியோகத்தர்களின் | பகுப்பாய்வுபின் பின்னர் இது தொடர்பாக எடுக்கபடும் என குறிப்பிடுகின்றோம். | சுங்க வரி மோசடியை கட்டுப்படுத்துவதற்கு நவீன தொழில்நுட்ப முறைமையொன்றை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொதுவான கடமைகளின் போது இனங்காணப்பட்ட பல்வேறு சுங்க தவறுகளுக்காக அனேகமாக வெகுமதிகள் செலுத்தப்படுகின்றமையாலும் அதில் 20 சதவீதத்திற்கு சமனான சதவீதம் இந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதன் காரணமாக இந்த நிதியம் தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது. | | |
| (ii) | சுங்க தவறுதலுக்காக தண்டப்பணம் விதிக்கும் போது இந்த தண்டப்பண பெறுமதியில் இந்த நிதியத்திற்கு 20 சதவீதம் மற்றும் அரசாங்கத்திற்கு 30 சதவீதம் செலவு வைக்கப்படுகின்றது. சில சந்தர்ப்பங்களின் போது மோசடிகளை மேற்கொள்வதற்கு முயற்சி எடுக்கப்பட்ட பொருட்கள் மூன்று மடங்கான பெறுமதியாக காண்பித்து தண்டப் பணம் விதித்தல், சுங்க தவறுகளில் குறிப்பாக காணப்படுகின்ற குறைபாடொன்று ஏற்படாமை, தற்போது காணப்படுகின்ற சுதந்திர பொருளாதார கொள்கையின் காரணமாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள சிக்கலான நிலைமைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் சுங்க கட்டளைச் சட்டம் மற்றும் உரிய நிதியங்களின் சட்டரீதியான ஏற்பாடுகளை முறையாகவும் காலரீதியிலும் திருத்தாமை போன்றவற்றின் காரணமாக இந்த நிதியத்திற்கு ஒதுக்கப்படுகின்ற நிதியின் அளவு உயர்வடைந்து சென்றுள்ளது. | சுங்க கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட (அ) பிரிவில் காண்பிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி சுங்க வரி அறவிடல் மேற்கொள்ளப்படுகின்றது. பாராளுமன்றத்தால் அங்கீகாரிக்கப்படுகின்ற வருமான உள்ளடக்க கட்டளை மூலம் அந்தந்த பொருட்களுக்கு உரிய சுங்க வரி அளவு வெளியிடப்படுகின்றது. அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வரிப்பணத்தை அறவிட்ட பின்னர் அந்த அரசாங்கத்தின் ஒன்றினைந்த நிதியத்தில் சுங்க தண்டப்பணம் விதித்தல் அல்லது பொருட்களை அரசுடமையாக்கல் சுங்க கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மாத்திரம் அவ்வாறு மேற்கொள்ளப்படுவது நிறுவனம் அல்லது ஏற்றுமதிக்கு முயற்சிக்கின்ற சந்தர்ப்பங்களின் போது ஆக இருந்ததுடன் அவ்வாறான சட்டரீதியான மீறல்களுக்குரிய பொருட்கள் ''சட்டவிரோத பொருட்கள்'' ஆனமையால் அதன் அடிப்படையில் வரி அறவிட முடியாது இருந்ததுடன் சுங்க கட்டளைச் சட்டத்தின் உரிய பிரிவுகளின் பிரகாரம் செயற்பட்டு அல்லது | அரசாங்கத்திற்கு கிடைக்கின்ற வருமானத்தை பாதுகாத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தண்டப்பணத்தை விதித்தல் மாத்திரம் மேற்கொள்ளமுடியும். அதனால் வரி விதித்தல் பொதுவான முறைமையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சட்டரீதியான இறக்குமதிகளுக்கு மாத்திரமே விதிக்க முடியும். சுங்க விசாரணைகளில் சுங்க தண்டப் பணம் விதிக்கும் ஆரம்ப நோக்கமாக சுங்க விதிகளை மீறுகின்ற தரப்பினர் சுங்க சட்டத்திற்கு உட்படுத்துதல், அவர்களுக்கு தண்டணை வழங்குதல் மற்றும் உரிய தரப்பினருக்கிடையே சுங்க சட்டங்களை நோக்காக கொண்டு இணங்குதல் மற்றும் பின்பற்றுதலை மேலோங்கச் செய்ய முடியும். | |
| (உ) | இந்த நிதியத்தின் ஆரம்ப நோக்கங்களில் ஒன்றாக சுங்க உத்தியோகத்தர்கள் தமது கடமைகளில் ஈடுபடுகின்ற போது இழப்பீடு செலுத்துதல் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட மேற்கூறப்பட்ட கடந்த 10 வருட காலப்பகுதியில் அவ்வாறான எந்தவொரு இழப்பீட்டு கொடுப்பனவும் அறிக்கையிடப்படவில்லை. | மேற்கூறப்பட்ட 10 வருட காலத்தில் இவ்வாறான இழப்பீடு கோரிக்கைகள் எதுவும் கிடைத்திருக்கவில்லை. மேலும் சுங்க சுற்றிவளைப்பிற்காக அதிக முயற்சி எடுக்கின்ற நடவடிக்கைகளில் அர்பணிப்புடன் செயற்படும் உத்தியோகத்தர்களுக்கு உயிர் ஆபத்துக்கள் ஏற்படுகின்றமையால் அந்த உத்தியோகத்தர்களுக்கு உயிர் ஆபத்தை கவனத்தில் கொள்ளாமல் கடமைகளுக்காக அர்ப்பணிப்பதற்கு இவ்வாறான நிதியத்தில் கணிசமான தொகையொன்று காணப்படுதல் காப்புறுதி நிதியத்தைப் போன்று அவர்களின் குடும்பங்களுக்கும் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்றது. அது உததியோகத்தர்களின் கடமைகளை நிறைவேற்றும் | நிதியத்தின் திரண்ட நிதி மீதி தொடர்ச்சியாக அதிகரிக்கின்றமை மீளாய்வு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | போது உயிர் ஆபத்தை கவனத்தில் கொள்ளாமல் கடமைகளுக்காக அர்ப்பணிப்புடன் ஈடுபடுவதை ஊக்குவிக்கின்றது. அவ்வாறே இந்த நிதியத்திற்கு இவ்வாறு பணம் ஒதுக்குதல் சுங்க கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றது என மேலும் அறியத்தருகின்றோம். | |
| (ஊ) | மீளாய்வாண்டிலும், கடந்த 04 ஆண்டுகளிலும் நிதியத்தின் ஒட்டுமொத்த வருமானம் ரூபா 6,138,888,719 ஆக இருந்ததுடன் அந்த காலப்பகுதியில் நிதியத்திலும் செலவிடப்பட்ட தொகை (பெறுமானத் தேய்வு தவிர) ரூபா 364,303,235 ஆகும். அதன் பிரகாரம் மொத்த வருமானத்தில் 6 சதவீதம் ஆன குறைந்த சதவீதமே நிதியத்திலிருந்து செலவிடப்பட்டு மிகுதி 94 சதவீதம் நிதியத்தில் சேர்க்கப்பட்டதன் காரணமாக நிதியத்திற்கு வருடாந்தம் ஒதுக்கப்படுகின்ற அளவு தொடர்பாக மீளாய்வொன்று மேற்கொள்ள வேண்டியிருந்தது. | பகுப்பாய்வு ரீதியான இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடுகின்றோம். | நிதியத்தின் திரண்ட நிதி மீதி தொடர்ச்சியாக அதிகரிக்கின்றமை மீளாய்வு செய்யப்படல் வேண்டும். |